GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 202
LIBRARY

Register No.

FA9A

5689–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the various classes of Criminal courts in India? What are their constitution and powers?

   இந்தியாவில் உள்ள பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்கள் யாவை? அவற்றின் அமைப்பு மற்றும் அதிகாரங்கள் என்ன?

2. A fair trial must be conducted in the presence of the accused. Explain the procedure for appearance of accused.

   ஒரு நியாயமான வழக்கு விசாரணை என்பது குற்றம் சாட்டப்பட்டவர் முன்னிலையிலேயே நடத்தப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் வழக்கு விசாரணையில் நேரில் தோன்றுவதற்கு பின்பற்றப்படும் நடைமுறையினை விளக்குக.

3. Explain the important characteristics of Juvenile court. How it differs from ordinary criminal courts?

   இளஞ்சிறார் நீதிமன்றத்தின் முக்கிய பண்புகளை விளக்கவும். அது எவ்வாறு சாதாரண குற்றவியல் நீதிமன்றங்களில் இருந்து வேறுபடுகிறது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define maintenance. Discuss the provisions for Maintenance of wife in Criminal Procedure Code.

   வாழ்க்கைப் பொருளுதவி குறித்து விளக்வும். மனைவிக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள பிரிவுகள் குறித்து விவாதிக்கவும்.

5. Enumerate the provisions relating to the procedure for removal of public nuisance under the Code of Criminal Procedure.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பொதுத் தொல்லைகளை நீக்குவதற்காக உள்ள சட்டப் பிரிவுகளை பட்டியலிடவும்.

6. Who may be appointed as a probation officer? What are his duties?

நன்னடத்தை கண்காணிப்பு அதிகாரியாக யார் நியமிக்கப்படலாம்? அவரின் கடமைகள் என்ன?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) First Information Report

முதல் தகவல் அறிக்கை

(b) Proclamation

பிரகடனம்

(c) Summary Trial

சுருக்குமுறை விசாரணை

(d) Anticipatory bail

முன்பிணை

(e) Legal aid to accused

குற்றம் சாட்டப்பட்டவருக்கு சட்ட உதவி

(f) Observation Home

கண்காணிப்பு இல்லம்

(g) Admonition.

மன்னித்து விடுதலை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Telephonic message was received by an officer-in-charge of Police station reporting the Commission of dacoity and requesting for help. The police officer immediately rushed to the spot where he recorded detailed statement of the complainant about the occurance. Will the statement be treated as First Information Report? Decide.

காவல் நிலைய பொறுப்பு அதிகாரி ஒருவருக்கு, கூட்டுக் கொள்ளை நடந்ததாகவும், உதவி கோரியும் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த காவல் அதிகாரி சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று புகார்தாரரிடம் சம்பவம் குறித்து விளக்கமான வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதனை முதல் தகவல் அறிக்கையாக கருதலாமா? தீர்மானிக்கவும்.

9. A court takes cognizance of an offence of murder three years after the date of the alleged murder. Accused pleads that this is barred by limitation. Decide.

ஒரு நீதிமன்றம் கொலை வழக்கினை, கொலை நடந்ததாக கூறப்படும் தேதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் புலன் கொள்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் அதனை புலன் கொள்வதற்கான காலவரம்பு கடந்துவிட்டதாக வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.

10. 'A' is accused of theft in one occassion and of causing grievous hurt on another occassion. Two offences were included in one charge and were tried together into single trial by the Magistrate and 'A' was convicted. Decide the validity of the order.

'அ' என்பவர் திருட்டுக்காக ஒரு நேர்விலும், கொடுங்காயம் ஏற்படுத்தியதற்காக மற்றொரு நேர்விலும் குற்றம்சாட்டப்படுகிறார். இரண்டு குற்றங்களுக்கும் சேர்ந்து ஒரே குற்றச்சாட்டு வினையப்பட்டு ஒன்றாக விசாரிக்கப்பட்டு நடுவரால் தண்டிக்கப்படுகிறார். அந்த ஆணையின் செல்லும் தன்மை குறித்து தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA9B**

**5690–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (Semester) EXAMINATIONS, MAY 2023.

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

CIVIL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்க்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the procedure for Computation of period of limitation for appeal Under the Limitation Act, 1963.

   காலவரம்பு சட்டம், 1963ன் கீழ் மேல்முறையீட்டு காலவரம்பினை கணக்கிடும் முறையை விளக்குக.

2. Who is Receiver? Enumerate the rules for appointment and powers of receivers under the Code of Civil procedure.

   சொத்து பேணுநர் என்பவர் யார்? சொத்து பேணுநர் நியமனம் மற்றும் அவரது அதிகாரங்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டப்படி தொகுக்கவும்.

3. Explain the contents of Summons and various modes of serving a summons?

   அழைப்பாணையில் இருக்க வேண்டிய விவரங்கள் மற்றும் அதனை சார்பு செய்யும் முறைகளை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the grounds for filing Revision petition before the High Court.

   உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கான காரணிகளை விவரிக்கவும்.

5. Explain the "Doctrine of Res judicata" Under code of Civil procedure, 1908?

   உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் முன் தீர்ப்பு தடை கோட்பாட்டினை விளக்குக.

6. Discuss in detail the procedure for filing suit by pauper?

வறியவர் வழக்கு தொடுக்கும் நடைமுறையினை விவரிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறுகுறிப்புகள் எழுதுக?

(a) Foreign Judgement

வெளிநாட்டு தீர்ப்புரை

(b) Temporary Injuction

இடைக்கால தடையாணை

(c) Second Appeal

இரண்டாம் மேல்முறையீடு

(d) Amendment of plaint

திருத்தப்பட்ட வழக்குரை

(e) Review

மறு ஆய்வு

(f) Inter pleader suit

இடை பாத்திய வழக்கு

(g) Ex-parte order

ஒருதலைப்பட்ச உத்தரவு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Veena filed a suit against Leena for recovery of money. While the suit was pending Leena died. Then Veena filed impleading suit/petition against Leena's daughter as defendants. Whether the impleading petition is maintainable? Decide.

வீணா என்பவர் லீனா என்பவர் மீது தனக்கு சேர வேண்டிய பணத்திற்கு வழக்கு தாக்கல் செய்கிறார். வழக்கு நிலுவையில் இருக்கும் போது லீனா இறந்துவிடுகின்றார். பிறகு லீனாவின் மகளை பிரதிவாதியாக சேர்க்க வீணா வழக்குட்படுத்தல் மனு செய்கின்றார். அந்த மனு நிலைக்கத்தக்கதா?

9. A suit for recovery of possession of Landed property and mesne profits was filed by Arjun against Dharun. The Court granted decree for recovery of possession of immovable properties. State the rights available if any, to Arjun and Dharun for mesne profits.

அர்ஜூன் என்பவர் தருண் என்பவருக்கு எதிராக நிலச் சொத்துகளின் சுவாதீனத்திற்காகவும் இடைகால பலனை பெறவும் வழக்கு தாக்கல் செய்கிறார். நீதிமன்றம் அசையாச் சொத்துகளின் சுவாதீனத்தை பெற தீர்ப்பானை வழங்குகிறது. தருண் என்பவருக்கு எதிராக இடைக்கால பலனைப் பெறுவதற்கான உரிமை ஏதேனும் அர்ஜூன் என்பவருக்கு உள்ளதா என்பதை கூறவும்.

10. Mr. Gugan and Mrs. Sundari married themselves at Kanchipuram. Both of them lived at Chennai. Due to dispute between them, Wife Mrs. Sundari deserted Mr. Gugan and lived with her parents home in Madurai. Mr. Gugan filed a petition for Resitution of conjugal rights at Chengalpattu District Court. Is this petition is maintainable?

திரு. குகன் மற்றும் திருமதி சுந்தரியின் திருமணம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. இருவரும் சென்னையில் வசித்தனர். இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதால் சுந்தரி தனது பெற்றோர் வீடான மதுரையில் வசிக்கிறார். தற்போது திரு. குகன் தன் மனைவி சுந்தரியுடன் சேர்ந்து வாழ்வதற்கான மனுவை செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார். இம்மனு நிலைக்கதக்கதா?

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 2023
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA9C**

**5691–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five-year Regular Course)

Fifth Year – Ninth Semester

LAW OF TAXATION

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the provisions of Customs Act 1963 relating to the determination of duty where imported goods consist of articles liable to different rates of duty.

   இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் வெவ்வேறு வரி விகிதங்களுக்கு பொருப்பான பொருட்களை கொண்டிருக்கும் 1963 ஆம் ஆண்டு சுங்கவரிச்சட்டத்தின் கீழ் வரி நிர்ணயிப்பதனை விளக்கவும்.

2. Define "capital assets", describe the different kinds of capital gain.

   "மூலதன சொத்துக்கள்" வரையறுத்து பல்வேறு வகையான மூலதன ஆதாயத்தினை விளக்குக.

3. Define 'Tax'. Explain the object and characteristics of taxation.

   வரி என்பதனை வரையறுத்து வரிவிதிப்பின் நோக்கங்களையும், குணாதிசியங்களை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the income from house property with permissible deductions.

   வீட்டு சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் அனுமதிக்க கூடிய கழிவுகளை விளக்குக.

5. No tax shall be levied or collected except the procedure established by law" - Discuss.

"வரிவிதிப்பானது அல்லது வரி வசூலானது சட்டத்திற்குட்பட்டதே" - விவாதிக்கவும்.

6. Enumerate the procedure of refund, search, seizure, and arrest under the Tamil Nadu Goods and Services Tax Act, 2017.

தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டம், 2017 ன் கீழ் கைது, சோதனை, பற்றுகை, மற்றும் திருப்புதல் குறித்த நடைமுறைகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short note on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Canons of equity

சமத்துவ விதி

(b) Perquisites

இடை ஆதாயங்கள்

(c) Depreciation

தேய்மானம்

(d) Agricultural Income

விவசாய வருமானம்

(e) International taxation

சர்வதேச வரிவிதிப்பு

(f) Intra-state supply

மாநிலத்திற்குள் அளிப்பு

(g) Ad valorem.

மதிப்பு விகித அளவு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களை கூறி விடையளிக்கவும்.

8. Mrs. Youlena, working as a teacher has received the following salary for the previous year 2022-23 as follows

Basic payment – 5,00,000

Dearness allowance – 3,00,000

House Rent allowance – 75,000

City compensatory allowance – 40,000

Medical allowance – 25,000

Her Expenditure as follows house rent : 12,000 pm, GPF-1,00,000/-

LIC – 1,00,000/-

Calculate her tax liability for the assessment year 2023-2024.

திருமதி யுலேனா வின் முந்தைய ஆண்டு 2022-23 பெற்ற ஆசிரியப்பணிக்கான சம்பளம் மற்றும் செலவு பட்டியல் பின்வருமாறு

வரவு பட்டியல்

அடிப்படை சம்பளம் – 5,00,000

அகவிலைப்படி – 3,00,000

வீட்டு வாடகைப் படி – 75,000

நகர ஈட்டுபடி – 40,000

மருத்துவ படி – 25,000

செலவு பட்டியல் :

வாடகை 12,000 பிரதிமாதம் பொது வருங்கால வைப்பு நிதி: 1,00,000

ஆயுள் காப்பீட்டு கழக வைப்பீடு 1,00,000

அவர்களுடைய வருமான வரியினை வரிவிதிப்பு ஆண்டு 2023-24 ன் படி கணக்கிடுக.

9. Mr. Faizal left India for the first time on 20th May 2019. During the year 2022-23 Mr. Faizal came to India on 25.5.2022 and staged for a period of 65 days. Determine his residential status for the previous year 2022-23

திரு. பைஷல் என்பவர் முதன்முறையாக 2019 ம் ஆண்டு மே மாதம் 20 ம் தேதி இந்தியாவை விட்டு சென்றார். 2022-23 ம் ஆண்டில் 25.5.22 தேதி இந்தியா திரும்பினார். 65 நாட்கள் தங்கி சென்றார். 2022-23 முந்தைய ஆண்டின் படி ஃபைஷல் என்பவரின் குடியிருப்பு நிலையினை கண்டறியவும்.

10. Mr. Sagar received Rs. 13,60,000 as house rent from his home during the financial year 2022-23. The fair rent is Rs.42,000 per month. The standard rent 78,000 per month. Municipal value is Rs.88,000 per month. Calculate Annual value of the house property for the assessment year 2023-2024.

திரு. சாகர் என்பவர் அவரது வீட்டிலிருந்து வாடகையாக 2022-23 ம் ஆண்டிற்க்கு, ரூ.13,60,000 பெறுகிறார். அதன் நியாயமான வாடகை பிரதி மாதம் ரூ.42,000, நகராட்சி மதிப்பு ரூ.88,000/- அதன் நிலையான வாடகை மதிப்பு ரூ.78,000 என உள்ளது. 2020-23 வரிவிதிப்புக்கு உரிய ஆண்டு பராமரிப்பு தொகையினை கண்டறியவும்.